# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 19–ம் நாள் சனிக்கிழமை வாதி தரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **பூமிநாதன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**19.07.2025 OS.No. 18/2023 வா.சா.1 ஆஜர்**

**(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து எனக்கு எனது உடன்பிறந்த சகோதரி பாக்கியலெட்சுமி கிரையம் செய்து கொடுத்த சொத்து என்றால் சரிதான் . நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் 15 கி.மீ துாரம் இருக்கும் என்றால் சரிதான் . தாவா சொத்து ஆதியில் சக்குடி கிராமத்தைச் சேர்ந்த நாகமலை தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல . சாலைத்தேவர் மனைவி கருப்பாயி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது ஆகும் . செட்டில்மென்ட் காலத்தில் நாகமலைத் தேவர் மனைவி நா .கருப்பாயி அம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. சாலைத்தேவர் மனைவி கருப்பாயி அம்மாள் பெயரில் தான் இருந்தது. எனது சகோதரி எப்போது திருமணமாகி சக்குடி கிராமத்திற்கு சென்றார் என்றால் சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். நாகமலைத் தேவர் வாரிசுகளுக்குள் நடைபெற்ற பாக பிரிவினை பற்றியும் தாவா சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது பற்றியும் எனக்கோ எனது சகோதரிக்கோ தெரியாது என்றால் சரிதான். சாலைத் தேவர் மனைவி கருப்பாயி அம்மாள் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டது UDR காலத்திற்கு பின்பு தான் என்றால் சரியல்ல . தாவா சொத்து நாகமலைத்தேவர் வாரிசுகளுக்குள் பாக பிரிவினை ஏற்பட்டு இந்த நம்பர் 2 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரிய கருப்பத் தேவருக்கு தாவா சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல . நான் பெரிய கருப்ப தேவர் வாரிசுகளிடம் தாவா சொத்தை கிரையம் வாங்காமல் சாலைத் தேவர் வாரிசுகளிடம் எனது சகோதரி வாங்கிய கிரையம் சட்டப்படி செல்லாது என்றாலும் அதனடிப்படையில் நான் என் சகோதரியிடமிருந்து வாங்கிய கிரையமும் செல்லாது என்றாலும் சரியல்ல . தாவா சொத்திற்கு எனது சகோதரி பெயரியேலா எனது பெயரிலோ பட்டா மாற்றம் ஏற்பட்டதா என்றால் இல்லை . தற்போது வரை சாலைத் தேவர் மனைவி கருப்பாயி அம்மாள் பெயரில் தான் உள்ளது . இந்த நம்பர் 2 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரிய கருப்ப தேவருக்கு சர்வே எண் .28/11 ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பெரிய கருப்ப தேவருக்கு கிடைத்த பாக சொத்துக்களை அவர் விற்றுவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.6 ஆவணம் கிரைய உடன்படிக்கை பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான் . மேற்படி வா .சா.ஆ.6 ஆவணத்தில் தாவா புல எண் .29/7 பெரிய கருப்ப தேவருக்கு பாத்தியமான சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் பக்கம் 4 ல் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் தாவா புல எண்ணுக்கு தவறுதலாக சா .கருப்பாயி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது சொத்தின் ஆவணங்களை பிரதிவாதிகள் வசம்

ஒப்படைத்தாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதில் எந்த பிரதிவாதியிடம் தாவா சொத்தின் ஆவணங்களை நான் ஒப்படைத்தேன் என்றால் 1ம் பிரதிவாதி மல்லிகாவிடம் ஒப்படைத்தேன். தாவா சொத்தை மல்லிகாவிடம் நான் விற்பனை செய்வதற்கு பேசி முடித்தேனா என்றால் சரிதான். மல்லிகாவிடம் தாவா சொத்திற்கான கிரைய பத்திரங்களை யார் கொடுத்தார் என்றால் சாலைத் தேவர் மகன் முத்து கொடுத்தார் . 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு நான் ஏதேனும் முன்பணம் பெற்றேனா என்றால் இல்லை . தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடம் விற்பனை செய்வதற்கு பேசி முடித்து நான் முன்பணம் பெற்று விட்டேன் என்றாலும், அதனால் தான் தாவா சொத்திற்கான அசல் ஆவணங்களை 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைத்து விட்டேன் என்றாலும் சரியல்ல . பின்னர் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் 2ம் பிரதிவாதி தான் என தெரிய வந்ததால் என்னிடம் கிரையம் பெறாமல் நிறுத்தி விட்டார் என்றால் சரியல்ல . நான் வாங்கிய முன்பணத்தை திருப்பி கொடுக்காமல் வைத்திருப்பதால் 1ம் பிரதிவாதி ஆவணத்தை வைத்திருக்கலாம் என்றாலும், 2ம் பிரதிவாதிக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல . தாவா சொத்திற்கு UDR காலத்தில் சா.கருப்பாயி பெயரில் தவறுதலாக ஏற்பட்ட பட்டவை ரத்து செய்யக் கோரி 2ம் பிரதிவாதி 2008ம் ஆண்டிலேயே சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்து விசாரணை நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . தற்போது வரை தாவா சொத்திற்கான பட்டா சாலைத் தேவர் மனைவி கருப்பாயி அம்மாள் பெயரில் தான் உள்ளது . வருவாய் கோட்டாட்சியரிடம் மேற்படி மனு விசாரணை நிலுவையில் இருக்கும் போதே எனது சகோதரி தாவா சொத்தை சா .கருப்பாயி அவர்களின் வாரிசுகளிடம் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. UDR காலத்தில் ஏற்பட்ட தவறை சரி செய்வதற்கான அதிகாரம் வருவாய் கோட்டாட்சியருக்கு இல்லை என தெரிவித்து மேற்படி மனு முடித்து வைக்கப்பட்டதன் அடிப்படையில் தற்போது அது சம்பந்தமான மேல் முறையீடு மாவட்ட வருவாய் அலுவலரிடம் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு விபரம் யார் சொன்னது என்றால் முத்துவும் நானும் சொன்னோம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் யார் கொடுத்தார் என்றால் நானும் சாலைத் தேவர் மகன் முத்துவும் கொடுத்தோம். நான் தாவா சொத்தை கிரையம் வாங்கியவுடன் 2ம் பிரதிவாதி முத்தையா எனது பெயரிலும் எனது சகோதரி பெயரிலும் பூவந்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் பூவந்தி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. எஸ்.பி ஆபிஸில் புகார் கொடுத்தார் . மேற்படி மனு விசாரணையில் நாங்கள் தாவா சொத்திற்குள் போக மாட்டோம் என பூவந்தி காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து விட்டு வந்தோமா என்றால் நான் காவல் நிலையத்திற்கே செல்லவில்லை . நான் காவல் நிலையம் சென்றேன் என்றாலும் மேற்படி தாவா சொத்திற்குள் போக மாட்டோம் என எழுதி கொடுத்து விட்டு வந்த பின்னர் மீண்டும் தாவா சொத்திற்குள் போனதால் 2ம் பிரதிவாதி மீண்டும் புகார் கொடுத்து பூவந்தி காவல் நிலையத்தில் எனது பெயரில் குற்ற எண் .20/2022ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பூவந்தி காவல் நிலையத்தில் என் மீது இது சம்பந்தமாக எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை . எஸ் பி அலுவலகத்தில் தான் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நான் 4வது எதிரியாகவும் , எனது சகோதரி 2ம் எதிரியாகவும் சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான் . மேற்படி புகார் மனு குற்ற வழக்கு எண் குறித்த விபரங்களை எல்லாம் நான் எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் மேற்படி விபரங்கள் எல்லாம் எனக்கு வழக்கு தாக்கல் செய்த போது தெரியாது. மேற்படி குற்ற வழக்கு விபரங்கள் எல்லாம் எனக்கு முன்னரே தெரியும் என்றாலும , அதிலிருந்து என்னை தற்காத்து கொள்ள தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 முதல் 13 வரையான ஆவணங்கள் தாவா வழக்கிற்கு பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் . நான் தாவா பிராதில் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் தாவா சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் தாவா பிராது தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam